1990 ஏப்ரல் 3]

திரு. கோ. வீரையன்; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே திருத்துறைப்பூண்டி வட்டம் ஆலங்காட்டிற்கு கந்தப்பரிச்சான் ஆற்று இறைவைப் பாசனத் திட்ட ஆய்வு முடிவு பெற்று, அதற்கான மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது. அது அரசு அனுமதிக்காகக் காத்திருக்கிறது என்று சொல்கிறார்களே, அப்படியிருந்தால் இந்த ஆண்டு அதற்கான அனுமதியை வழங்கி, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

9–45 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நல்ல திட்டம் என்பதாலே மாறுபட்ட கருத்து இல்லை. அரசினுடைய கைக்கு இன்னும் அறிக்கை வந்து சேரவில்லை. அது வந்து சேர்ந்த பிறகு அரசு அது குறித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசினுடைய கைக்கு இன்னும் திட்டம் வந்து சேரவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அப்படி அது வந்து சேர்ந்தவுடன் இந்த நிதி ஆண்டிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நிலைமைக்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்கும்.

சுரங்கப்பாதை அமைத்தல்

* 2156 டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி [3]

திரு. எஸ். சிவலோகம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தென்ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் நகரின் குறுக்கே செல்லும் ரயில் பாதையின்கீழ் சுரங்கப்பாதை (Subway) அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிடப்பட்ட இரயில்வே பாதையானது நகரின் நடுவில் செல்கிறது. இதன் இரு புறமும் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், அதன் வளாகமும், பெருவாரியான

கிராமங்கள் ஒரு புறமும், மறு பக்கம் விரிவடைந்த நிலையிலே பெரும் ஜனத்தொகை உள்ள நகரமும் இருப்பதனாலே, 50 வருடங்களுக்கு முன்னர் இருந்த அமைப்பாகத்தான் அந்தப் பாதை அமைப்பு இப்போதும் இருக்கிறது. இப்போது பெருகி வருகின்ற போக்குவரத்து நெரிசலிலே, பொது மக்கள் குறித்த நேரத்தில் வேலைக்கு மற்றும் வியாபாரத்துக்குச் செல்லமுடியாத நிலையிலே பெருத்த கஷ்டங்களுக்கும், நஷ்டங்களுக்கும் ஆளாவதால் அரசு பரிசீலனை செய்து அந்த இடத்திலே ஒரு சப்-வே அல்லது ஓவர் பிரிட்ஜ் அமைக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த இரயில்வே மேம்பாலம் கட்டுவது அந்த நகராட்சியின் எல்லைக்கு உட்பட்ட பகுதியாகும். அந்த இடத்திலே 1982 ஆம் ஆண்டே கட்ட வேண்டும் என்று முடிவு எடுத்த பிறகு அது கைவிடப்பட்டு இருக்கிறது. இப்போது அதனுடைய மதிப்பு கிட்டத்தட்ட ரூ. 600 இலட்சமாகும். இந்த ரூ. 600 இலட்சம் தொகையையும் நகராட்சியினுடைய எல்லைக்கு உட்பட்ட இடத்தில் நெடுஞ் சாலைத் துறை மேற்கொள்ள இயலாது. எனவே இந்த ரூ. 600 இலட்சத்தில் இரயில்வே இலாகா ரூ. 300 இலட்சத்தைக் கொடுக்கும். நகராட்சி ரூ. 100 இலட்சம் கொடுக்க முன்வர வேண்டும். இந்த மேம்பாலத்தைக் கட்டினால் அதன் பெரும் பகுதி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்குத்தான் பயன்படும் என்று அதனுடைய ரிஜிஸ்ட்டிரார் அவர்கள் கடிதம் எழுதி இருக்கிறார்கள். எனவே அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ரூ. 100 இலட்சம் கொடுக்க முன்வர வேண்டும். ஆக, நகராட்சியும் பல்கலைக் கழகமும் தங்கள் பங்கைச் செலுத்த முன்வருவார்களே யானால் நெடுஞ்சாலைத் துறையும் மக்களுடைய நலனைக் கருதி ரூ. 100 இலட்சம் தர முன்வரும்.

திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் பிச்சாவரம் சுற்றுலா மையமாக இருப்பதாலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மருத்துவப் பல்கலைக் கழகமும் இருப்பதாலும், மீன்வளம் அங்கு அதிகமாக இருப்பதால் அதைப் பதனிடுவதற்கு மக்கள் கடலூர் வரவேண்டிய நிலை இருப்பதாலும் அந்தச் சுரங்கப் பாதைக்கு அரசு முன்னுரிமை கொடுத்து பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, முன்னுரிமை கொடுத்தாலும் அது நகராட்சியினுடைய எல்லைக்கு உட்பட்ட பாலம்; நெடுஞ்சாலைத் துறைக்கு அங்கு அதிகாரம் இல்லை.